**இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக அபிவிருத்திச் செயற்திட்டம் (எஸ்ஈயூடிபி)–கட்டம் 1பீ 2015**

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக அபிவிருத்திச் செயற்திட்ட கட்டம் 1பீ இன் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அராபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைத் நிதியத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 திசெம்பர் 20 ஆந் திகதிய 836 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் பிரகாரம் இச் செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்படுகின்றது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் உயர் கல்வி அமைச்சாகவிருந்த தற்போதைய உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. பிரதேசரீதியான மற்றும் தேசியரீதியான தேவைகளைப் பிரதிபலிப்பதற்காக குறிப்பிடப்பட்ட பல்கலைக்கழகத்தில் பட்டக் கற்கைநெறிகளின் தரத்தை முன்னேற்றுவதன் மூலம் இலங்கையின் சமூக அபிவிருத்தி மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு துணைபுரிவதையும் அதேநேரம் தேவையான கல்விசார் அபிவிருத்தி திட்டத்தை அபிவிருத்தி செய்வதன் மூலமும் புதிய கேள்வியை தூண்டக்கூடிய பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்துவதன் மூலமும் மாணவர் எண்ணிக்கையை அதிகரிப்பதையும் இலக்காகக் கொண்டு அம்பாறையிலுள்ள இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தினை அபிவிருத்தி செய்வது செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். இவ் அபிவிருத்தித் திட்டமானது புதிய பீடக் கட்டிடங்கள், நூலகம் மற்றும் கற்றல் வள நிலையம், மாணவர் மற்றும் பதவியணியினர் தங்குமிடம், மீள் உருவாக்கம் மற்றும் ஏற்கனவேயுள்ள கட்டிடங்களை விட வெள்ள அபாயம் குறைந்த பகுதிகளிலுள்ள தற்போதைய தளங்கள் மீது பிரதானமாக அமையவிருக்கும் நலன்புரி வசதிகள் என்பனவற்றை வழங்குகின்றது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 1,660.05 மில்லியனிற்குச் சமமான குவைத் டினார் 3.50 மில்லியனானதுடன் இதில் ரூபா 1,421.57 மில்லியனிற்குச் சமமான குவைத் டினார் 3 மில்லியன் தொகை அராபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைத்து நிதியத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2012 செப்தெம்பர் 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2017 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் முகாமைத்துவத்தின் பெறுப்பாகும். மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கும் நியாயமாகச் சமர்ப்பிப்பதற்கும் உரிய உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைத்தல், அமுல்ப்படுத்துதல் மற்றும் பேணுதல்; பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளை தெரிவு செய்து பிரயோகித்தல் மற்றும் நியாயமான கணக்கீட்டு மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல் என்பன இந்தப் பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை

பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஊ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஏ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், செயற்திட்டத்தின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது நிதிகளின் பயன்பாடு மற்றும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பயன்படுத்தப்பட்ட நிதிகள் தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலங்கள் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | குவைத் டினார் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | குவைத் டினார் மில்லியன் | ரூபா மில்லியன் | குவைத் டினார் மில்லியன் | ரூபா மில்லியன் |
| குவைத் நிதியம் | 3.00 | 1,421.57 | 410.00 | 0.85 | 404.42 | 1.36 | 644.49 |
| இலங்கை அரசாங்கம் | 0.50 | 238.48 | 60.00 | 0.11 | 52.47 | 0.20 | 95.97 |
| **மொத்தம்** | **3.50** | **1,660.05** | **470.00** | **0.96** | **456.89** | **1.56** | **740.46** |

மேற்படி தகவலின் பிரகாரம், ரூபா 1,421.57 மில்லியனிற்குச் சமமான குவைத் டினார் 3.00 மில்லியன் ஒதுக்கீட்டில் 45 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 644.49 மில்லியனிற்குச் சமமான குவைத் டினார் 1.36 மில்லியன் மாத்திரம் செயற்திட்டக் காலப்பகுதியின் 62 சதவீதம் கடந்த பின்னர் பயன்படுத்தப்பட்டிருந்ததை இது வெளிப்படுத்தியது. எடுக்கப்பட்ட நடவடிக்கையை துரிதப்படுத்தினாலன்றி செயற்திட்டத்தின்

மிகுதி 02 வருட காலப்பகுதியின் போது செயற்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிகளை பயன்படுத்தக்கூடியதாக இருக்காது என்பதை இது சுட்டிக்காட்டியது.

**3.2 பௌதீக முன்னேற்றம்**

செயற்திட்டத்தின் ஆரம்ப வேலைத்திட்டத்தின் பிரகாரம், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 03 கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. அதில் ஒலுவில் மற்றும் சம்மாந்துறையிலுள்ள மாணவர் விடுதிகளின் நிர்மாண வேலைகள், கல்விசார் நிகழ்ச்சித்திட்ட நிலையம் மற்றும் பதவியணியினர் விடுதிகள் 2016 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. நீரியல் ஆய்வுகூடம், பொதுச் சிற்றூண்டிச்சாலை மற்றும் கூடாரம் மற்றும் மைதான வசதிகளிற்கான விஸ்தரிப்புக்கள் என்பவற்றின் நிர்மாண வேலைகளின் பௌதீக செயன்முன்னேற்றம் 85 சதவீதத்திற்கும் 98 சதவீதத்திற்கும் இடையில் இருந்த அதேநேரம் கேட்போர்கூட நிர்மாண வேலைகள் மீதான செயன்முன்னேற்றம் 2016 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு 10 சதவீதத்தில் இருந்தது.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கல்கிசையில் அமைந்துள்ள தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கல்விசார் நிகழ்ச்சித்திட்ட நிலையத்திலுள்ள கேட்போர்கூட நிர்மாண வேலைகளிற்கான மூலத் திட்டங்கள் முறையான அங்கீகாரமொன்றில்லாமல் தொடர்ச்சியாக மாற்றப்பட்டிருந்தன.

(ஆ) செயற்திட்டத்தின் ஆரம்பக் கட்டங்களில் தயாரிக்கப்பட்ட விரிவான செயற்திட்ட அமுலாக்கல் திட்டம் 02 சந்தர்ப்பங்களில் திருத்தப்பட்டிருந்தது. ஆகையால், 2015 திசெம்பர் 31 இற்கு முன்னர் பூர்த்தியாக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நிர்மாண வேலைகளின் காலப்பகுதி மீளாய்வுசெய்யப்பட்டு நீடிக்கப்பட்டிருந்தது. மேலும், 2014 யூலையில் ஆரம்பிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட பொது சிற்றூண்டிச்சாலை மற்றும் மைதானம் மற்றும் கூடாரம் போன்றவற்றின் நிர்மாண வேலைகள் 12 மாதங்கள் காலதாமதங்களுடன் 2015 யூலையில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மேற்குறிப்பிடப்பட்டவற்றிற்கு மேலதிகமாக, 2014 இல் திருத்தப்பட்ட வேலைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்காத கேட்போர்கூடத்தின் நிர்மாண வேலைகளிற்கான ஒப்பந்தங்கள் குறிப்பிடத்தக்களவு காலதாமதங்களுடன் 2016 ஏப்ரல் 26 இல் செயற்திட்டத்தால் வழங்கப்பட்டிருந்தன. அதன் விளைவாக, செயற்திட்டக் காலப்பகுதி 2017 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தம் உரிய நேரத்தில் வழங்கப்பட்டிருந்தால் ஏற்பட்ட செயற்திட்ட அமுலாக்கல் கிரயத்தை குறைத்திருக்க முடியும் என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

**3.4 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்**

செயற்திட்ட உடன்படிக்கையின் 02 ஆம் அட்டவணையின் கீழ் பிரேரிக்கப்பட்ட முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடத்திற்கான உப வேந்தர் லொட்ஜ், விருந்தினர் இல்லம், கலாச்சார நூதனசாலை மற்றும் கட்டிடங்கள் என்பவற்றின் நிர்மாண வேலைகள் முறையான அங்கீகாரமில்லாமல் 2013 ஒக்தோபர் 08 இல் நடைபெற்ற வழிகாட்டல் குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் முடிவுறுத்தப்பட்டிருந்தது.